1972 சனவரி 28]

***76 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், சோமனூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருந்தகம் அமைத்திடுவதற்காக கட்டடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டும். பல மாதங்களாக மருந்தகம் திறக்கப்படாமலிருப்பதின் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் சோமனூரில் ஒரு மருந்தகம் அமைப்பதற்காக அரசு ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு விட்டன. அதற்காக ஒரு தனியார் கட்டிடமும் வாடகைக்கு எடுக்கப்பட்டது. ஆனால் சோமனூரில் இத்திட்டம் நீட்டிக்கப்படும்பொழுது அதனைச் சார்ந்துள்ள நீலாம்பூர், அரசூர் ஆகிய இடங்களுக்கும் சேர்த்து நீட்டிக்கப்படவேண்டும் என்று முடிவு பிறகு எடுக்கப்பட்டது. அதற்கான அரசு ஆணைகள் சமீபத்தில்தான் பிறப்பிக்கப்பட்டன. சோமனூர், சாமலாபுரம், நிலாம்பூர், அரசூர் ஆகிய பகுதிகளுக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை 29-1-1972 முதல் நீட்டிக்க, அரசு தற்போது முடிவு செய்துள்ளது. ஆகவே அன்று முதல் சோமனூர் மருந்தகம் செயல்படத் துவங்கும்.

## அரிசனக் குடியிருப்புத் திட்டம்

***77 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் தமிழ்நாடு அரசு உதவி கோரியுள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இது பற்றி அரசு பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே. அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும், இதர வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் மத்திய அரசு கொடுத்துவந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டு விட்டதால், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் மூலமாக கடன் உதவி பெற்று, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, மத்திய அரசு திட்டத்தின் அடிப்படையில் தாமான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக 'டைப் டிஸைன்' கொடுக்கப்பட்டு. பரிசீலனை செய்யப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஆனால் அவர்களிடத்திலிருந்து இதுவரை தகவல் எதுவும் வரவில்லை. எல்.ஐ.சி. மூலமாக கடன் உதவி பெற்று நூறு ரூபாய்க்குக் குறைந்தவர்களுக்கு ஒரு ரகம் என்றும், நூறு ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு ரகம்